7000 அரசாங்க ஊழியர் வேலை இழக்கும் ஆபத்து

Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

ஈழநாடு

EELANADU

பதிவிலக்கம் எண். 49 — மலர் 10

பொன் 389 — National Tamil Daily — இதழ் 140 — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிரசை ஆனி 17 ரபி: ஆகி 3 ஞாயிற்றுக்கிழமை (30-6-68)

கொழும்பு, சனி

சிங்களத்தில் தேர்ச்சி பெறத் தவறிய புதிய அரசாங்க ஊழியர் சுமார் ஏழாயிரம் பேர் இன்றுடன் வேலையைஇழக்கும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர்

1956-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்கள் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதிக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்று தேசிய அரசாங்கம் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் கால அவகாசம் கொடுத்திருந்தது. இந்தக் காலக்கெடுவை இனி நீடிக்க முடியாதென பிரதமர் தெரிவித்துள்ளார். சிங்களத்தில் தேர்ச்சிபெறாத புதிய ஊழியர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல் விரைவில் திறைசேரியிலிருந்து கிடைக்குமெனத்தெரிகிறது.

இதற்கிடையில் இந்த புதிய ஊழியர்கள் பற்றி என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி அரசாங்க சேவைத்தொழிற்சங்கங்கள் சில ஆராய்ந்து வருவதாகவும் அரசியல் கட்சிகளும் இதுபற்றி ஆராயவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

மார்ட்டின் கமிஷன் சிபார்சின் அடிப்படையில் நகரதேர்தல்

23 வட்டாரங்களில் டிசம்பரில் நடைபெறும்

பழைய மேயர்கள் திருப்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 17 வட்டாரங்களும் 23 வட்டாரங்களாக அதிகரிக்கப்பட்டே இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெறும். இது மார்ட்டின் கமிஷனிலுள்ள 25 வட்டாரங்களிலிருந்து 2 வட்டாரங்கள் நீக்கப்பட்டதாக இருக்குமென உள்ளூராட்சி அமைச்சைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மார்ட்டின் கமிஷனில் தெரிவிக்கப்பட்ட 25 வட்டாரங்களில் 23 வட்டாரங்கள் தற்போதுள்ள 17 வட்டாரங்களில் வாழும் மக்கள் தொகையைக் கொண்டு சமனாகப் பிரிக்கப்பட்டனவாகும். மிகுதி இரு வட்டாரங்களும் நல்லூர், கொக்குவில் கிராமசபையிலிருந்து சேர்க்கப்பட்டவையாகும்.

நல்லூர், கொக்குவில் கிராமசபையிலிருந்து சேர்க்கப்பட்ட இரு வட்டாரங்களும் நீக்கப்பட்டு 23 வட்டாரங்களுக்குமே இவ்வருட டிசம்பர்மாதம் தேர்தல் நடைபெறவிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி இது பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

மாநகரசபையை மீண்டும் மக்களிடம் அமைச்சர் கையளிக்க முன்வந்திருப்பதுபற்றி முன்னாள் மேயர்களில் சிலர் தெரிவித்த அபிப்பிராயங்கள் பின்வருமாறு-

வட்டாரங்கள் எத்தனையானாலும் சபை 1966ம்- ஆண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

ஆசார சீலர்களாக ஆலயத்துள் செல்வோம்

தீண்டாமை ஒழிப்பு இயக்க குழுவினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரும் வடஇலங்கை ஐக்கிய கள்இறக்கும் தொழிலாளர் சங்கத்தினரும் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை நேற்றுக் காலை இறுதியாகச் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

நாளைஇங்கு கொடியேற்று வைபவத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாவதை முன்னிட்டு உதவி பொலிஸ் சுப்ரிண்டன் திரு. ஆர். சி. தவராசா தலைமையில் 50 பேரைக் கொண்ட பொலிஸ்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிபரை நேற்றுக் காலை சந்தித்த இருகுழுவினரும் தாம் ஒருபோதும் பலாத்காரமாக ஆலயப் பிரவேசம் மேற்கொள்ளப் போவதில்லையெனவும் யாராவது மறித்தால் தாம்பொலிசில் புகார் செய்வரென்றும் தெரிவித்தனர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் தாம் நாளை ஆசாரசீலராய் மாவிட்டபுரத்துள் ஆலயப் பிரவேசம் செய்யவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆசார சீலர்களாய்அமைதியாக ஆலயத்தினுள் சென்று சுவாமி தரிசனம் செய்வதற்குத் தங்களுக்குப்பொலிஸ் பாதுகாப்புத் தரும் படியும் அவர்கள் கோரினர்.

நேற்று பொலிஸ் அதிபரைச் சந்தித்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் திருவாளர்கள் நாகரத்தினம், சிதம்பரம் உட்பட 8பேரும் கள்ளிறக்கும்தொழிலாளர் சங்கத்தில்திருவாளர்கள் கனகரத்தினம், முத்தையா ஆகியோர் உட்பட 5பேரும்கலந்துகொண்டார்ன.

[கா. நி]

'செல்வநாயக புரம்'

யாழ்ப்பாணம், சனி

அச்சுவேலியில் நேற்றுத் திறக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் குடியேற்ற வீட்டுத் திட்டத்துக்கு ''செல்வநாயக புரம்'' என அமைச்சர்திருதிருச்செல்வம் திறப்புவிழா வைபவத்தின் போது பெயர் சூட்டினார்.

(கா. நி)

தேர்தலுக்கு முன் நவீன சந்தை அமைப்பு வேலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபை புதிய தேர்தலுக்கு முன்னர் பொதுச்சந்தைக்கான கட்டடவேலைகள் ஆரம்பமாகும். மாநகரசபைகமிஷனர் சந்தைக்கட்டடத்திற்கான ஒப்பந்தத்தில்இவ்வாரத்தில் கைச்சாத்திடுவார் எனத் தெரிகிறது.

மாநகரசபையின் விசேட ஆணையாளர்களான திருவாளர்கள் டபிள்யூ பத்மநாதன், என். முருகவேள், என். குமாரகுலசூரியர் ஆகிய மூவரதும் ஆட்சி நிர்வாகம் நேற்று நள்ளிரவிலிருந்து உள்ளூராட்சி அமைச்சரால் நீக்கப்பட்டதிலிருந்து நேற்று முதல் பதில்கமிஷனரான திரு. எஸ் தங்கவேலின் நிர்வாகத்தில் மாநகரசபை இயங்குகின்றது.

மாநகரசபைக்கான புதிய கமிஷனர் இன்னும் ஒருவார காலத்துக்குள் நியமிக்கப்படவிருக்கின்றார். அதுவரை பதில் ஆணையாளர் திரு. எஸ். தங்கவேல் மாநகரசபைஆணையாளராகக் கடமையாற்றுவார்.

விஷேச ஆணையாளர்கள் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடமுடியாதிருந்த காரணத்தால்தான் சந்தை அமைப்பு வேலை நடைப்பட்டிருந்ததென்றும் இனி யாழ்ப்பாணம் பொதுச்சந்தைக் கட்டடத்துக்கான ஒப்பந்தம் இவ்வாரத்தில் மாநகரசபைஆணையாளரால் கைச்சாத்திடப்படும்எனவும் அறியப்படுகிறது.

டிசம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெற்று, ஜனவரி மாதத்தில் புதிய சபையிடம் மாநகரசபையைக் கையளிப்பதற்கு முன்னர் சந்தைக் கட்டட வேலையில் ஒருபகுதி முற்றாக முடிவடைந்துவிடுமென அதிகாரி ஒருவர் நேற்றுத்தெரிவித்தார்.

[கா. நி.]

ஈழநாடு

கிளை திறப்புவிழா

வடமராட்சிப் பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி ஈழநாடு ஸ்தாபனம் 1-7-68ந் திகதி காலை 9 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் கிளை அலுவலகமொன்றைத் திறந்துவைக்க விருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஈழநாடு விநியோகப் பரிசோதகராக திரு. ஜே. ஜெயக்குமார் இப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

852 விநியோக மனேஜர்

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலவிற்பனவு

கிளிநொச்சி - கண்டி வீதி திரு. மு. யோகலிங்கம் அவர்களிடம் 20-6-67 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 20-7-68 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
856 ஏலவிற்பனவாளர்

கல்வி

வகுப்புகள்:

ஜி.கி.இ.சாதாரணம் விஞ்ஞான வகுப்புகள். தனிப் பாடமாகவோ ஒருமித்தோ படிக்கலாம். அத்துடன் விசேஷ ஆங்கிலம், சிங்களம் தினசரி காலை மாலை வகுப்புகள். யாழ். கல்லூரி, 29, பருத்தித்துறைரோட்டு, யாழ்ப்பாணம். 1397

வாடகைக்கு

வீடு:

சகலவசதிகளுடன் கூடிய புதிய வீடு மகாஜன கல்லூரிக்கருகாமையில் வாடகைக்கு உண்டு. 30-ம் திகதி தொடக்கம் 2-ம்திகதிவரை தொடர்பு கொள்ளலாம். காசிப்பிள்ளை, சுப்பணாவத்தை, அளவெட்டி வடக்கு. 1395

பிட்றின்
நல்ல விளைச்சலுக்கு
உத்தரவாத
மளிக்கிறது.
பிட்ரின் — கிருமிகளால் உண்டாகும் சேதத்திலிருந்து செடிகளை 3 வார காலத்துக்குப் பாதுகாக்கக் கூடிய நீடிய செயற்பாடுடைய, கருவறுக்கும் சஞ்சீவிக் கிருமிநாசினி. பயறுவகைகள், நாரத்தை வகைகள் முந்திரிகை, பருத்தி, வெங்காயம், உருளைக்கிழங்கு, புகையிலை, மிளகாய், ஆகிய பயிர்களைத் தாக்கும் அந்துப் பூச்சிகள், வண்டுகள், பனிப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள், இலைத்தத் துவெட்டிகள் செடி மூட்டுப்பூச்சிகள், சந்துக்குத்திகள், சந்து ஈக்கள். செதிள் பூச்சிகள், முதலியவற்றைக் கட்டுப் படுத்துவதற்கு மிகவும் உகந்தது.

ஷெல் ரசாயனப் பொருட்கள்
பாவித்து அதிக உணவு பயிரிடுக
ஷெல் ரசாயனப் பொருட்கள்
SHELL
ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள் 'அல்றெக்ஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்ட்ரா', 'ஆர்கொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', ஷெல் களைப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப-34, 'கிறமவின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே.
2012

யாழ்ப்பாண மாநகரசபை

வீடு வளவு விற்பனை

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வீடு வளவுகளிலிருந்து 1968-ம் ஆண்டு முதலாம் கந்தாயம் முடியும் வரை வருமதியான சோலைவரி நிலுவைக்காக, கைப்பற்றக்கூடிய அசைவுள்ள பொருட்கள் இல்லாத பட்சத்தில், [1] 1—10 வருட கால வாடகைப் பணத்தையும் இலாபப் பணத்தையும் [2] மரங்களையும், விளைபொருட்களையும், [3] வீட்டின் உதவுபொருட்களையும், [4] இதன் கீழ் விபரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனங்களையும் கைப்பற்றுவதற்கு மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் [அத்தியாயம் 252 252-ம் பிரிவின் பிரகாரம், விஷேட ஆணையாளர்களால் விடுக்கப்பட்ட விருந்துக் கட்டளைகளின் பிரகாரம், மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் [அத்தியாயம் 252] 256-ம் பிரிவின் பிரகாரம், அவ் வீடு வளவுகள் அதில் குறிப்பிடப்பட்ட திகதிகளில் [இதற்கிடையில் நிலுவையினையும், செலவுதொகையினையும் முற்றாகச் செலுத்தினாலன்றி] அந்தந்த இடங்களில் மு. ப. 9 மணி தொடக்கம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்படுமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மாநகரமண்டபம்,
யாழ்ப்பாணம்,
ஜூன் 16, 1968.

வே. தங்கவேலு
பதில் மாநகரசபை ஆணையாளர்

அட்டவணை

வட்டாரம் 13

2 ஆகஸ்ட் 1968

புன்னாலை வீதி: வீட்டு இல. 121/14, 121/5, 121/6, 121/13, 121/15, 121/16, 121/43, 121/56, 121/57, 121/58, 121/59, 121/60, 121/61, 121/62, 12/63.

3 ஆகஸ்ட் 1968

புன்னாலை வீதி: வீட்டு இல. 121/64, 121/65, 121/66, 121/67, 121/68, 121/69, 121/70, 121/17, 121/18, 121/19, 121/20, 121/21, 121/22, 121/23, 121/24.

4 ஆகஸ்ட் 1968

புன்னாலை வீதி: வீட்டு இல. 121/40, 121/41, 121/42.
நாவலர் வீதி: வீட்டு இல. 60, 60/1.
மின்சாரநிலைய வீதி: வீட்டு இல. 45.
ஆஸ்பத்திரி வீதி: வீட்டு இல. 93, 149.
சிவன்கோவில் வடக்கு வீதி: வீட்டு இல- 15, 17.

ஆகஸ்ட் 5, 1968

காங்கேசன்துறை வீதி: வீட்டு இல. 159, 243, 211, 181, 201, 205, 295/35, 295/36, 295/37, 295/41, 295/43, 295/51.

6 ஆகஸ்ட் 1968

காங்கேசன்துறை வீதி வீட்டு இல. 618, 618/1, 620, 622, 624.

வட்டாரம் இல. 14

2 ஆகஸ்ட் 1968

அம்பலவாணர் வீதி: வீட்டு இல. 32/4.
ஆஸ்பத்திரி வீதி: வீட்டு இல. 651, 336.
காங்கேசன்துறை வீதி: 24
ஸி. பொன்னம்பலம் வீதி: வீட்டு இல. 181, 175.
ஸி. பொன்னம்பலம் வீதி: வீட்டு இல. 7
ஸ்ரான்லி வீதி: 82, 4/2.
பருத்தித்துறை வீதி: வீட்டு இல. 140.
நாவலர் வீதி: வீட்டு இல. 272

வட்டாரம் இல. 4

2 ஆகஸ்ட் 1968

பாசையூர் 1-ம் குறுக்குத் தெரு: வீட்டு இல. 8, 16/1, 20, 28, 32.
பாசையூர் 2-ம் குறுக்குத் தெரு: வீட்டு இல. 19/1, 29/4, 35/2, 55, 57/3, 57/6, 57/5, 30, 32/1, 30/12, 42.
பாசையூர் 3-ம் குறுக்குத்தெரு: வீட்டு இல. 5, 15, 35/1, 35/15, 41.

3 ஆகஸ்ட் 1968

கொழும்புத்துறை வீதி: வீட்டு இல. 50/2, 64, 22 [3-வது காணி], 12/1.
பழைய பூங்கா வீதி: வீட்டு இல: 68, 68/1, 72, 106.
சென். அந்தனி வீதி: வீட்டு இல. 5, 16, 18, 22, 30, 46/6, 7; 8: 46/10, 46/11, 46/12, 46/13, 46/18, 46/20, 46/22, 46/24, 25; 46/26, 74.

4 ஆகஸ்ட் 1968

புங்கன்குளம் வீதி: வீட்டு இல. 25/2, 27, 27/2, 27/3, 27/5, 27/6.
கடற்கரை வீதி: வீட்டு இல. 46, 60 [ஈச்சமோட்டை]
ஈச்சமோட்டை வீதி: வீட்டு இல. 5/2, 27/11, 27/12, 40, 42, 56/6, 56/12, 56/2, 56/15, 58.
கடற்கரை வீதி: வீட்டு இல. 521. 521/2, 521/6, 527/2, 6, 531, 543/5.

5 ஆகஸ்ட் 1968

கடற்கரை வீதி: வீட்டு இல. 543/6, 577/1, 605, 603/1, 2, 605/4, 607.

வட்டாரம் இல. 11

6 ஆகஸ்ட் 1968

ஆசாத் வீதி: வீட்டு இல. 15, 36/4, 46, 52/24, 74.
கனிபா அப்துல் ஹமீத் வீதி: வீட்டு இல. 39, 67, 8, 22, 24.
ஐதறூஸ் மக்கம் வீதி: வீட்டு இல. 7, 23.
கலீபா அப்துல்காதர் வீதி: வீட்டு இல. 1, 3, 37, 67/12, 18, 14, 153/1, 153/4.

7 ஆகஸ்ட் 1968

நாவாந்துறை 1-ம் குறுக்குத் தெரு: வீட்டு இல. 8, 11.
நாவாந்துறை 2-ம் குறுக்குத்தெரு: வீட்டு இல. 16, 14, 9.
அராலி வீதி: வீட்டு இல. 23, 27/1, 27/2, 3, 27/4, 27/5, 27/6, 27/7, 29, 31.

9 ஆகஸ்ட் 1968

அராலி வீதி: வீட்டு இல. 33/1, 31/2, 31/3, 33, 35/5, 37, 37/1.

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
ரோயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு ஆயுத போட்டிக் குறைப்பு பற்றிய ரஷ்ய - அமெரிக்க பேச்சுக்கள்

காலம், நேரம் நிர்ணயிக்குமாறு ரஷ்யாவிடம் அமெரிக்கா கோரியது

வாஷிங்டன், ஜூன் 29

அணு ஆயுதப் போட்டியைக் குறைப்பதுபற்றி அமெரிக்கா, ரஷ்யாவுடன் தொடர்புகொண்டுள்ளது வாஷிங்டனுக்கும் மாஸ்கோவுக்கும் இடையே இதுசம்பந்தமாகத் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதை நேற்று அமெரிக்க ராஜாங்க இலாகாவைச் சேர்ந்த ஒரு பேச்சாளர் அறிவித்தார்.

அணு ஆயுதக் குறைப்பு சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்தும் நேரம், இடம் இவற்றை நிர்ணயிக்குமாறு அமெரிக்கா, ரஷ்யாவிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த அம்சங்கள் குறித்து இரு நாடுகளுக்குமிடையே விரைவில் உடன்பாடு ஏற்படலாமென ராஜாங்க இலாகா அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம்

திங்கட்கிழமையன்று கைச்சாத்திடப்படும்

இதற்கிடையில், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம், வாஷிங்டனில் திங்கட்கிழமையன்று கைச்சாத்திடப்படுமென்று அறிவிக்கப் பட்டுள்ளது. வாஷிங்டனிலுள்ள ரஷ்ய, பிரிட்டிஷ் தூதுவர்களும் அமெரிக்க ஒப்பந்தப் பிரதியில் தமது கையொப்பங்களை இடுவர் எனத்தெரிகிறது.

அதே நாளில், இதேமாதிரியான கச்சாத்திடுதல் லண்டனிலும் மாஸ்கோவிலும் நடைபெறும்.

சபா விவகாரம்

மலேஷிய - பிலிப்பைன்ஸ் பேச்சுக்கள் தொடரும்

பாங்கொக், ஜூன் 29

மலேஷியாவுக்கும் பிலிப்பைன்சுக்குமிடையே பிரச்னைக்குரிய பிரதேசமான சபா பற்றிய இரண்டு வாரப் பேச்சுவார்த்தைகள் நேற்று பாங்கொக்கில் முடிவடைந்தன. இப்பேச்சுவார்த்தைகளில் இரண்டு நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மீண்டும் திங்கட்கிழமையன்று பேச்சுவார்த்தைகளைத் தொடருவதென இரு பகுதியினரும் தீர்மானித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைகளை நடைபெற்ற முதல்வாரத்தில், இரு சாராரும் தமது நிலைகளை எடுத்துக்கூறினர்.

இரண்டாவது வாரப்பேச்சுவார்த்தைகளில், இரு பகுதியினரும் பரஸ்பர குற்றச்சாட்டுகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இவ்விதம் அவர்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டபோதும், சபா சம்பந்தமான தமது நிலைகளைத் தெளிவாக்கிக்கொள்ளும் வகையில், இப்பேச்சுவார்த்தைகள் ஒரளவு பயன் அளித்துள்ளன.

சபா விவகாரத்தை உலக நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடவேண்டுமென்ற பிலிப்பைன்சின் பிரதான கோரிக்கைபற்றி இம்மாநாட்டில் இன்னும் பேசப்படவில்லை. பிலிப்பைன்சின் இக்கோரிக்கையே, மாநாட்டின் முக்கிய அம்சமாக விளங்கும்.

---

21 இஸ்ரேலியருக்கு காயம்

அம்மான், ஜூன் 29

செங்கடலுக்கு வடக்கே, அரபுக் கொரில்லாப்படையினர், இஸ்ரேலிய தருப்புகள்மீது நடத்திய மோதலொன்றில், 21 இஸ்ரேலிய போர் வீரரைக் காயப்படுத்தி யிருப்பதாகக்கூறப்படுகிறது.

கொஸிஜினை ஜோரிங் சந்தித்தார்

மாஸ்கோ, ஜூன் 29

மேற்கு ஆசியாவில் ஐ.நா. விசேஷ பிரதிநிதியான டாக்டர் குணர் ஜாரிங், நேற்று மாஸ்கோவில், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

மேற்கு ஆசியப்பிரச்னை பற்றிய அவர் திரு. கொஸிஜினுடன்விவாதித்தார்.

மேற்கு ஆசியப் பிரச்னை குறித்து ஒரு நீர்வகாண முயன்றுவரும் டாக்டர் ஜாரிங் மேற்கொண்டுள்ள ராஜதந்திர முயற்சிகளில் ஒரு அம்சமே இந்த ரஷ்யவிஜயமெனக்கருதப்படுகிறது.

இந்தியாவுக்கு

'போயிங்' ஜெட் விமானம்

புதுடில்லி, ஜூன் 29

அமெரிக்காவிடமிருந்து இரண்டு 'போயிங்' ஜெட் விமானங்களை வாங்குவதற்கென இந்தியாவுக்கு 6 கோடி டொலர் கடன் வழங்க 13 அமெரிக்க வர்த்தக வங்கிகள் குழுவொன்று முன்வந்துள்ளது.

இந்த 'போயிங்' ஜெட் விமானங்கள் 1970-71 கால கட்டத்தில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கூரதார வதி

அனுராதபுரம், சனி

அனுராதபுரம் சதாசிவ மாவித்தியாலயத்திற்கும் அனுராதபுரம் தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கும் மரசில கடவுள் வழிபாடு வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அமெரிக்க

பிரதம நீதவான் நியமனம் ஜோன்ஸனுக்கு எதிர்ப்பு

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்காவின் பிரதம நீதவான் பதவிக்கு ஜனாதிபதி ஜோன்ஸன் பிரேரித்துள்ள பெயருக்கு அமெரிக்க செனேட்சபையில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. திரு ஜோன்ஸன் தெரிவு செய்துள்ளவர் திரு. ஃபோர்ட்ஸ் என்பவராவர்.

தாமத நடவடிக்கைகள் மூலம் தனது எதிர்ப்பைச் சபை வெளியிடாமலைக் கருத்தறி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் பகுதியில்

போர் விலக்குப் பிரதேசம்

தெஹ்ரோ, ஜூன் 29

ஈரான் பகுதியைப் போர் விலக்குப் பிரதேசமாக்கு வதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு ஒப்புக்கொண்டதாகவும், இஸ்ரேல் பிரதேசத்திலும் அதேயளவு பகுதி போர் விலக்குப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் படவேண்டுமென்று ஐ. அ. குடியரசு வெளியுறவு மந்திரி திரு. மகமது ரியாட் வலியுறுத்தியுள்ளார்.

மேற்கு ஆசியாவில் ஐ. நா. அமைதிப்படை ஒன்று நிறுவப்படுவதில் ஐ அ. குடியரசுக்கு ஆட்சேபமில்லையெனினும், முதலில் அந்தப் படையை ஐ. நா. தூதுவர் ஜாரிங் தேர்க்கிலேயே என்ன வென்பது தெளிவாக்கப்பட வேண்டுமென்று திரு. ரியாட் கூறியுள்ளார்.

கெய்ஸானில்

அமெரிக்க இராணுவம் வெளியேறும் முயற்சி தடைப்பட்டது

சைகோன், ஜூன் 29

தென் வியட்னாமிலுள்ள அமெரிக்க இராணுவ வட்டாரங்கள், கெய்ஸான் தளத்திலிருந்து அமெரிக்கத் துருப்புகள் வெளியேறுவது வட விபட்டும் பிரங்கித் துப்பாக்கிப் பிரயோகத்தால் தடைப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளன.

விபட்டும் போரில் சுடுபட்டுள்ள அமெரிக்கத்துருப்புகள் ஒரிடத்தில் நிலைகொள்ளாது அங்குமிங்கும் மாறி இயங்கிக்கொண்டிருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயே, கெய்ஸான் தளத்திலிருந்து வெளியேறுவதென அமெரிக்க ராணுவம் தீர்மானித்திருந்தது.

கன்முனையில்

வள்ளுவர் விழா

சாய்ந்தமருது, சனி

கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கம், எதிர்வரும் 29 திகதி கல்முனை நீலாவணன் நினைவாக வள்ளுவர் விழாவை கல்முனையில் நடாத்தவுள்ளது.

மே. வங்காள இடைத் தேர்தல்

பெப்ரவரியில் நடத்துமாறு காங்கிரஸ் கோரிக்கை

கல்கத்தா, ஜூன் 29

மேற்கு வங்காள இடைத் தேர்தலை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் நடத்துமாறு மேற்கு வங்காள காங்கிரஸ் பிரதேசக் கமிட்டி, தேர்தல் கமிஷனரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வருடம் நவம்பர் மாதத்தில் இடைத்தேர்தலை வைப்பது என்ற தேர்தல் கமிஷனரின் ஆலோசனை அவ்வளவு உகந்ததல்லவெனக் காங்கிரஸ் பிரதேசக் கமிட்டி சுட்டிக் காட்டியுள்ளது.

மழையும் சேறும்

நவம்பர்மாதத்தில்மேற்கு வங்காளத்தில் மழையும், அதைத் தொடர்ந்து சேறும் சகதியுமாகவுமிருக்குமென்றும், இதனால் போக்குவரத்து தொடர்புகள் பாதிக்கப்படுமென்றும் காங்கிரஸ் கமிட்டி தெரிவித்துள்ளது.

தாம் செய்யாத ஒரு குற்றத்துக்காக, வாக்காளர்களின் பெரும்பான்மையினர் வாக்களிக்க முடியாமற் போவதில்லையென்றும் அது மேலும் கூறியுள்ளது.

இக்காரணங்களுக்காக இடைத் தேர்தலை, நவம்பர் மாதத்திலிருந்து 2 மாதங்கள் ஒத்திப்போடுமாறு காங்கிரஸ் பிரதேசக் கமிட்டி, தேர்தல் கமிஷனரிடம் விண்ணப்பித்துள்ளது.

இந்திய-ரஷ்ய வர்த்தக பேச்சுக்கள் முடிவுற்றன

ரஷ்யப்பிரதமருடனும் தினேஷ் சிங் ஆலோசனை

மாஸ்கோ, ஜூன் 29

ரஷ்யாவுக்கு விஜயம்செய்துள்ள இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ் சிங், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகத் தொடர்புகள், அபிவிருத்தி பற்றித் தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டுள்ளார்.

வெளிநாட்டு வர்த்தகத்துக்குப் பொறுப்பான சோவியத் மந்திரியுடன், திரு. தினேஷ் சிங், தமது முன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நேற்றுடன் முடித்துக்கொண்டார்.

திரு. தினேஷ் சிங், சோவியத் பிரதமர் திரு. கொசிஜினுடனும் தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளார்.

பிரதமர் கொசிஜினுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் சினேகபூர்வமான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும், பொருளாதார விவகாரங்கள் தவிர்ந்த ஏனைய முக்கிய விஷயங்களையும் தாம் இருவரும் ஆராய்ந்ததாகவும் திரு. தினேஷ் சிங், மாஸ்கோவில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

[6-ம் பக்கம் பார்க்க]

அமெரிக்க

ஏழைமக்கள் இயக்கத்தைச் சேர்ந்த 70 பேர் கைது செய்யப்பட்டனர்

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்க ஏழை மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த 70 பேரை நேற்று பொலிசார் வாஷிங்டனில் கைதுசெய்தனர்.

இயக்கத்தின் நோக்கம், வறுமை நிரப்புவதாகவே தோன்றுகிறதென்று பொலிசார் கருதுகின்றனர்.

பொலிஸ் செலவு

இயக்க நடவடிக்கைகளின் விளைவாகப் பொலிஸ் 'ஓவர்டைம்' செலவுக்கு லட்சக் கணக்கான டொலர் வரை செலவாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழைகளின் நிலையை அரசாங்கத்துக்கு உணர்த்துவதே இயக்கத்தின் நோக்கமென இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

"ராதா"

இந்திராணி பத்தி

○ ஆலயங்களில்
○ திருமண வைபவங்களில்
○ இன்ப நிகழ்ச்சிகளில்

எங்கும் மணப்பது இந்திராணி பத்திகளே!

தயாரிப்பாளர்கள்:
ராதா பேர்பியூமரி அன் ராதா புடக்ஸ்

ஏஜென்டுகள்:

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
53, கே. கே. எஸ். ரோட், 160, செட்டியார் தெரு
யாழ்ப்பாணம். கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அன்பு புனிதமானது. நமதுஇதயக் கோவிலில் இருக்கும் தெய்வம்அது. சாந்தியிலே வளர்ந்து அமைதியிலே மன் நறு மணத்தைப் பரப்பிநமக்கும் பலருக்கும் நன்மை செய்கின்றது.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு
Independent National Tamil Daily
Printed at EELANAD Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389

[illegible] வருஷம் ஆனி மாதம் 17-ந் திகதி
(30-6-68)

சிங்களத் தேர்ச்சி

அரசாங்க சேவையிலுள்ள ஏழாயிரம் தமிழ் ஊழியர்களின் நிலையென்ன? அவர்களை நம்பி வாழும் மனைவி, மக்கள், தள்ளாத வயதிலுள்ள பெற்றோர்களின் கதி என்ன;

புதிய அரசாங்க ஊழியர் [அதாவது சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட 1956-ம்ஆண்டுக்குப்பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்] சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு இன்றுடன் முடிவடைகிறது. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர், 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் புதிய அரசாங்கஊழியர் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. இக் காலஎல்லைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெறுபவர்களுக்கு சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு கொடுக்கப்படமாட்டாதென்பதுடன் உத்தியோகம் உறுதிப்படுத்தப்படமாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒருசிலர் சிங்களத்தில் இக்காலக்கெடுவுக்குள் தேர்ச்சிபெற்றிருக்கக் கூடும். அநேக புதிய ஊழியர்களும் மூன்று வருடங்களுக்குள் சிங்களம் படித்து அதில் தேர்ச்சி பெறுவது சுலபமல்ல.

இன்றுடன் முடிவடையும் காலக்கெடுவை ஒரு கணம்கூட நீடிக்கப்போவதில்லை என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா, நேற்று முன்தினம் கூட்டிய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். சிங்களத்தில் தேர்ச்சிபெறத் தவறிய புதிய ஊழியர்களின் நிலை என்ன என்பதை பிரதமர் தெரிவிக்கவில்லை. ஆனால் 1965ம் ஆண்டு ஜூலை முதல் திகதி வெளியிடப்பட்ட இறைசேரி சுற்றுநிருபத்தின்படி, சிங்களத்தில் தேர்ச்சிபெறாத புதிய ஊழியரின் உத்தியோகம் உறுதிப்படுத்தப் படாமல் அதாவது அவர்கள் தற்காலிக சேவையிலேயே இருந்து வருகின்றனர். இதனால் அவர்கள் எச்சம்பத்திலும் இன்றுதொடக்கம் வேலையிலிருந்து நீக்கப்படலாம்.

தமிழ் அல்லது ஆங்கில மொழிகள் மூலம் கல்வி கற்று இந்த மொழிகள் மூலம் அரசாங்க சேவைப் பரீட்சைக்கும் தோற்றி அதில் சித்திபெற்று அரசாங்கசேவையில் சேர்ந்தவர்கள், அவர்களுக்குமுற்றும் புதிய மொழியான சிங்களத்தில் மூன்று வருடங்களுக்கிடையில் தேர்ச்சிபெறமுடியுமா? சிங்களத்தில் கல்வி கற்ற சிங்களத்தில் அரசாங்க சேவைப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மூன்று வருடங்களுக்குள் தமிழ்த் தேர்ச்சி பெறுவார்களா? தமிழ்ப்பிள்ளைகள் சிங்களத்தையும் கற்பதற்கு அரசாங்கம் வாய்ப்பும் வசதியும் அளித்திருந்தால் இப்படிவற்புறுத்துவதற்கு நியாயமிருக்கிறதென்று சொல்லலாம். எந்த வசதியுமளிக்காமல் சிங்களம் கற்பதற்கு முன்னர் அளித்துவந்த தூண்டுதல் உதவிப்படிகளை நிறுத்திவிட்டு, இன்றுடன் முடிவடையும் காலக்கெடுவைகளையும் நீடிக்க மாட்டேன் என்ற பிரதமர் கூறுவது என்ன நியாயம்?

அடுத்த தேர்தலைக்கருத்தில் வைத்து அரசியல் லாபத்தை நோக்கமாகக் கொண்டு புதிய அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு கொடுக்கப்பட்ட காலக்கெடுவை நீடிக்க முடியாதெனப் பிரதமர்தெரிவித்திருக்கிறார். பத்திரிகை நிருபர்கள்மகாநாட்டைக் கூட்டியதும் அதில் அவர் தெரிவித்தவைகளும் இதைத் தெளிவாகக் காட்டுகிறது இதன்மூலம் பிரதமர் தாம் ஓர் அரசியல்வாதிதான் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். அரசியல் ஞானி அல்ல என்பதையும் தெளிவாக்கியிருக்கிறார். ''அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பான்; அரசியல் ஞானி அடுத்த சந்ததி பற்றிச் சிந்திப்பான்'' என்பது அனுபவமொழி.

புதிய அரசாங்க ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்குக் கொடுத்த காலக்கெடுவை பிரதமர் மேலும் நீடிக்க மறுத்ததன் மூலம் (1) சுமார் ஏழாயிரம் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பரிதாபமான நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார். (2) இலங்கை அரசாங்கசேவையில் இனி தமிழருக்கு இடமில்லை என்பதை தெளிவாக்கி தமிழ் மக்களின் அதிருப்தியைத் தேட வழி செய்திருக்கிறார். (3) அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களமும் தமிழும் தெரிந்திருக்க வேண்டும் என ஐக்கியதேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்த கொள்கையையே மீறியிருக்கிறார். (4) அரசாங்க உத்தியோகம் மக்களுக்குச் சேவை செய்வதல்ல என்பதையும் பிரதமரே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கான காலக்கெடுவை நீடிக்க மறுப்பது தேசிய ஐக்கியத்தை வளர்க்க உதவி செய்யாது. தேசிய ஐக்கியம் பேச்சினால் ஏற்படுத்திவிட முடியாது; செயலினால் தான் ஏற்பட முடியும். பிரதமருக்கு இது தெரியாமல் இருக்க முடியாது.

கேரளாவில் ஆளுங் கட்சியினர் ஒத்துழைக்க தீர்மானம்

திருவனந்தபுரம், ஜூன் 29

கேரளாவின் ஆளுங்கட்சியான ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அங்கத்துவக் கட்சிகள், தாம் ஒன்றையொன்று பகிரங்கமாகத் தாக்கிப் பேசுவதில்லையென்றும், கொள்கை விஷயங்களில் அதிக அளவில் ஒத்துழைப்பதெனவும் தீர்மானித்துள்ளன.

கட்சித் தலைவர்கள் மாநாடொன்றில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி

குடியேற்றத்திட்டம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்சுவேலியில் சிறுபான்மைத் தமிழர்களுக்கென அமைக்கப்பட்ட 54 வீடுகளைக்கொண்ட வீட்டுக்குடியேற்றத்திட்டத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நேற்றுமுன்தினம் திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, நகர அமைப்பு நிர்மாண திரு. நெவில் குணரத்தின, உள்ளூராட்சி மேலதிக டைரக்டர் திரு. எஸ். வி. குணவர்த்தன, நீர்விநியோக டைரக்டர் திரு. சி. இராசையா, நிரந்தரக்காரியதரிசி திரு. ஏர்ளி குணவர்த்தன ஆகியோர் உட்பட இன்னும் பல உயர்தர அதிகாரிகள் இவ்வைபவத்துக்கு வருகை தந்திருந்தனர்.

[ஈ. நி.]

எதிரி துவக்குடன் நின்றார்

சாவகச்சேரி, சனி

''1ம் எதிரி வீட்டுப் பக்கமாக வெடிச் சத்தம் கேட்டது. அத்திசையை நான் பார்த்தபோது, ராமு கார்த்திகேசு தோட்டத்தில் விழுந்தார். 2ம் எதிரி காசிநாதர் 1ம் எதிரி தில்லையம்பலத்தின் வளவிற்குள் துவக்குடன் நின்றார். அருகில் மற்ற எதிரிகளும் நின்றனர்.''

அல்லாரை கொலைவழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது மு. விஜகித்தம்பி சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினார். எதிரிகள் சார்பில் பரிஸ்டர் எம். சிவானந்தன், புறக்டர்கள் எஸ். கே. திரவியநாயகம், எஸ். பி. மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் அட்வக்கேட் எஸ். ஜெயக்கொடி, புறக்டர் வி செல்லத்தம்பியின் அனுசரணையுடனும் பொலிசாரின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

இவ்வழக்கில் இவ்வருடம் மே மாதம் 8ந் தேதி அல்லாரையில் ராமு கார்த்திகேசுவைக் கொலைசெய்ததாக மு. தில்லையம்பலம், ந. காசிநாதர், த. பஞ்சாட்சரம், வை. நாகநாதி, வ. சின்னத்தம்பி, மு. கனகசபை ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

செபமாலை மாதா பெருநாள்

ஊர்காவற்றுறை, சனி

பெரியமடு செபமாலை மாதா திருநாள் அடுத்த மாதம் இரண்டாம்திகதி நடைபெற இருக்கிறது. தீவுப்பகுதியிலிருந்துஇத்திருநாளில் கலந்து கொள்ள முடியாத பக்தர்களின் வசதிக்காக சரவணை சின்னமடுமாதா கோவிலில் இரண்டாம்திகதி காலையில் விசேஷ ஆராதனைகள் நடைபெறவிருக்கின்றது.

செப்டம்பரில் நடைபெறும்

கிளிநொச்சி, சனி

அகில இலங்கைத் தமிழ் மறைக்கழகத் தேர்வு, செப்டம்பர் மாதம் 28ந் திகதி காலை நடைபெறவிருக்கின்றது. அடுத்த மாதம் நடைபெறவிருந்த இத்தேர்வு [illegible]

மனித சமுதாயத்தின் நெஞ்சில் என்றும் அவர் நினைவிருக்கும்

டாக்டர் கே. வி. சண்முகரத்தினம் அவர்கள் அமரராகி இன்றுடன் இரண்டாண்டுகள் முடிவடைகின்றன. அன்பும்பண்பும் சேவை உணர்ச்சியுமிக்க அவர் உள்ளத்தினை இங்குபடம்பிடித்துக்காட்டுகிறார், வைத்தியத்துறையில் பலகாலமாக அவரிடம் பணியாற்றிய ஊழியர். அவர் நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இற்றைக்கு இரண்டாண்டுகளுக்கு முன் இதேநாள் ஆம், 1966 ஜூலை 30-ம் நாள் காலை எம்மோடெல்லாம இனிக்க இனிக்கப்பேசி ஆறுதல்மொழிகூறி 'இரண்டொருநாளில் திரும்பிவிடுவேன் என்றுஉறுதிகூறிக்கொழும்பு சென்றவர் இரண்டு நாளை ன என்றுமே திரும்பிவராமற் போய்விடுவார் என்று நாம் கனவுகூடக் கண்டதில்லை. டாக்டவர்கள் மறைந்து இன்றுடன் இரண்டாண்டுகள் கழிந்துள்ளன. இரண்டு ஆண்டுகளென்ன இரண்டாயிரம்ஆண்டுகள் கழிந்தாலும் டாக்டரவர்களின் சேவையும், தியாகமும் சமுதாயத்தின் நெஞ்சினின்றும் அகன்றுவிட முடியாது.

தன் ஊழியனுடன் டாக்டர் அவர்கள்

நான் வயிற்றுவலி காரணமாக நடுஜாமத்தில் வெளியில் சென்று என்னையுமறியாமல் வாந்திஎடுக்கின்றேன். அப்பொழுது எழுந்து நடக்கும் சக்தியற்று சுருண்டுவிடுகிறேன், ஓர் உருவம் என்னை அப்படியே கட்டித்தூக்கிக் கட்டிலில் படுக்கவைத்து ஆசுவாசப்படுத்தி அறிவு தெளியவைக்கின்றது. திரும்பிப்பார்க்கின்றேன். தெய்வமாக காட்சியளிக்கின்றார் டாக்டரவர்கள், அதன்பின்னரும் அவரிடம் நோய் நிலைக்கமுடியுமா?

தீமையின்முன் துணிவு

ஒரு நாள் மாலை டாக்டர் அவர்களும் நானும் ஒரு நோயாளியைப் பார்த்து விட்டுப் பண்ணை வீதிவழியாக திரும்பிக்கொண்டிருந்தோம். தடித்துக்கொழுத்த உருவம் ஒன்று தன்நிலையறியா நிலையிலே நடுவீதியிலே சரங்களையும் விரித்துக்கொண்டு எமக்கு எதிர்த்திசையிலே வந்துகொண்டிருக்கின்றது. டாக்டர் அவர்கள் காரைச் செலுத்திக் கொண்டுவந்தார். உருவத்தைக் கண்டதும் காரின் வேகம் அதிகரிக்கின்றது. பின் ஆசனத்திலிருந்த எனக்கோ உடல் நடுக்கமெடுக்கின்றது சுயநினைவிலே இல்லாத அந்த உருவத்திற்கு காரின் வேகத்தைப் பற்றிய கவலை எங்கே இருக்கப்போகின்றது. அந்தமனிதனுக்குப் பக்கத்தில் கார் திடீரென நின்றது. கார்நிறுத்தப்பட்ட சத்தம்கேட்டதும் அந்த மனிதன் சுயநிலைக்கு திரும்பிவிட்டதற்கு அடையாளமாக 'ஐயா மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கைகூப்பி மன்றாடினன்.

கைராசியும் முகராசியும்

ஒரு நடுநிசி; ஊர் அடங்கிப்போயிருக்கும்வேளை காரின் சுத்தத்திற்கு விட்டு முற்றத்திற் படுத்த என்னையே மறந்திருந்தவேளை. அவலக் குரலுடன் வீட்டு வாசலில் காரொன்று இடைவிடாமல் அலறுகிறது துள்ளியடித்துக் கொண்டு எழுந்து ஓடிப் போய் கேற்றைத்திறக்கின்றேன் ஒருதாயும் தந்தையும் மூச்சுவிடாமல் அழு துடிக்கும் ஒரு பச்சிளங் குழந்தையுடன் காரைவிட்டிறங்கி வந்து ஐயாவென அழுகின்றனர். அதற்குள் டாக்டரவர்கள் எழுந்து வந்து நோயாளிகளைப் பரிசோதிக்கும் அறையில் ஆயத்தமாக நிற்கின்றார். பெற்றோருடன் குழந்தையும் புன்சிரிப்புடன் அழைத்துக் குழந்தையைக் [illegible] டியில் படுக்கவைத்து ''எ[illegible] ணடா சொடியா, என் அழு[illegible] ன்றாய்'' என்று ஆதரவுட[illegible] பரிசோதிக்கின்றார். டாக்ட[illegible] அவர்களின் கைபட்ட[illegible] தான் தாமதம் குழந்தை [illegible] க்க ஆரம்பித்து விட்டது. [illegible] களுக்கு அதிசமாய்ப் போ[illegible] விட்டது. இதைத்தான் [illegible] ராசி முகராசி என்று சொ[illegible] லுவார்களோ! இவையெ[illegible] லாம் சிறு உதாரண[illegible] இதைப்போ[illegible] எத்தனை[illegible]

மக்களுக்காகப் பாடுபட்[illegible] டாக்டர் அவர்கள் இ[illegible] வன் 'பாதியில் பறித்[illegible] கொண்டுவிட்டான்.' இற்[illegible] க்கு டாக்டர்அவர்கள் அ[illegible] ராகி இரண்டாண்டுகள் [illegible] த்தியாகின்றது. இரண்[illegible] ண்டு என்ன இரண்டாயிர[illegible] ஆண்டுகள் கழிந்தாலும்ட[illegible] டரவர்களின்சேவையுந்தி[illegible] கமும் மனிதசமுதாயத்தி[illegible] நெஞ்சினின்றும் [illegible] விடமுடியாது.

—குப்[illegible]

பொருளாதார நெரு[illegible] உற்பத்திபெருக[illegible]

அச்சுவேலியில் உதவி உள்ளூராட்சி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இன்று இலங்கை மக்கள் மிகவும் நெருக்கடியான பொருளாதார நிலையிலிருக்கிறார்கள். இறக்குமதிக்குக் கூடுதலான தொகையையும் ஏற்றுமதியிலிருந்துகுறைந்த வருவாயையும் பெறுவதே இதற்குக் காரணமாகும். இதிலிருந்து விடிவு காண நாம் உற்பத்தித்தொகையை இன்னும் அதிகரிக்கவேண்டும்'

இவ்வாறு அச்சுவேலி வீடமைப்புத் திட்ட திறப்பு விழாவில் உரைநிகழ்த்திய உள்ளூராட்சி உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை இவ்வைபவம் நடைபெற்றது. 4,20,000 ரூபா செலவில் அமைக்கப்பட்ட 54 வீடுகளைக் கொண்ட இவ்வீட்டுத்திட்டத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் திறந்து வைத்தார்.

திறப்பு விழாவுக்கு முன்னர் அமைச்சர் திருச்செல்வம், உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, நிரந்தரக்காரியதரிசி திரு. ஏர்லி குணவர்த்தன, நகர நிர்மாணிப்பாளர் திரு. நெவில் குணரத்தின, நீர்விநியோக டைரக்டர் திரு. சி. இராசையா, சிரேஷ்ட உதவிக்காரியதரிசி டபிள்யூ. பத்மநாதன், மேலதிக உள்ளூராட்சி கமிஷனர் எ[illegible] வ. குணவர்த்தன, உள்[illegible] ராட்சி உதவி ஆணையாள[illegible] திரு. எஸ். முருகவேள் ஆ[illegible] யோர் மேளவாத்தியங்க[illegible] டன் ஊர்வலமாக அழைத்[illegible] வரப்பட்டார்கள்.

குடியேற்ற வீட்டுத்தி[illegible] டம் 300 க்கும் மேற்பட்[illegible] தேசியக் கொடிகளாலு[illegible] வாழை, கமுகு, முக்கி[illegible] மகரதோரணங்கள், பச்[illegible] மாவிலைகளாலும் அலங்க[illegible] சப்பட்டிருந்தன கோப்பா[illegible] எம். பி. திரு. எஸ். க[illegible] வேலுப்பிள்ளை தலைமை[illegible] நடைபெற்ற கூட்டத்தி[illegible] உதவி உமைச்சர் திரு. ஆ[illegible] பிரேமதாசா மேலும் பேசி[illegible] தாவது:-

இவ்வீட்டுத்திட்டம் [illegible] யில் வசிப்பவர்களுக்கு [illegible] வும் நன்மைபயக்கத்த[illegible] தாகவிருக்கும். இத[illegible] அமைப்பதில் அமைச்ச[illegible] திருச்செல்வம் எடுத்த [illegible] மம் இலகுவானதல்ல. இ[illegible] திட்டம் முதலில் அச்சுவே[illegible] யில்தான் ஆரம்பப[illegible] செய்துவைக்கப்பட்டுள்ள[illegible]

இதுவரை எந்த அரசா[illegible] கமும் செய்யாத இத்தி[illegible] டத்தை தேசிய அரசா[illegible] கமே முதல் நடைமுறை[illegible] க் கொண்டுவந்துள்ள[illegible] சகல மக்களையும் சாதி, ம[illegible] பேதமின்றி, வறுமை.பி[illegible] பட்டினியின்றி வாழவை[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ந்தில் ...க்கும்

... இன் ...ண்பும் ...யிடித் ...ரிடம் ...ரசுரிக்

...யும் தந்தை ...டாகச் சுழுது ...ச்சிலேடு குழ ...காரரிடமிட்டிற ...யாவென அல ...தற்குச் டாக் ...எழுந்து வந்த ...ப் பரிசோதிக் ...ஆத்தமாக ...பெற்றோருடன் ...புகிறிப்புடன் ...குழந்தையைகட் ...வைத்து "எ ...யா, ஏன் அழுகி ...று ஆசரடன் ...ரூர். டாக்டர் ...யபட்டது ...ம் குழந்தைகிள் ...த்து விட்டது. எ ...சமாய்ப் போய் ...தைத்தாக் ...ை என்று சொல் ...ா! இவையெல் ...உதாரணங்க ...எத்தகைய ...ாகப் பாடுபட்ட ...வர்களே இறை ...யில் பதித்துக் ...ட்டான்.' இற்றை ...அவர்கள் அமர ...டான்டுகள் பூர் ...து. இரண்டா ...இரண்டாயிரம் ...ழிந்தாலும்டாக் ...சேவையும்தியா ...தசமுதாயத்தில் ...ம் என்று ...த.

—குப்பு

ஆலயப்பிரவேசப் பிரச்னையில் சட்டத்தின்தலையீடு

இன்று, சமூகத்துச் சில மக்கள் மத்தியில் எழுந்துள்ள ஆலயப் பிரவேசப் பிரச்னை மிகவும் முக்கிய மான பிரச்னை.

வருங்காலச் சமூகத்திற்கு மேம்பாடோ தாழ்ச்சியோ இந்தப் பிரச்னையை இன்று சமூகப் பெருமக்கள் தீர்த்துவைக்கும் முறையிலேப் பொறுத்ததாகும்.

வன்முறையின்றியும், சட்டத்தின் தலையீடின்றியும் தீர்வுகாணப்படுமேல் சமூக சமூகத்திற்கு ஒரு மகத்தான வெற்றியும் உலக அரங்கில் கீர்த்தியும் உண்டாகும்.

ஆனால் இந்தப் பிரச்னை இன்று அடைந்துள்ள நிலைமையை நோக்குங்கால், மிகவும் பயங்கரமாக இருக்கின்றது.

தார்களுக்கிடையே எழுந்த ஓர் உரிமைப் பிரச்னையைத் தீர்த்துவைக்க முற்படுவதாகிய ஓர் அன்புப் பாவனையோடு அணுகப்பட வேண்டிய பிரச்னை.

இது மனமாற்றத்தின் அடிப்படையில் தீரவேண்டிய பிரச்னையேயொழிய, வன்முறை புரட்சியினாலே அல்லது சட்டத்தின் துணை கொண்டோ தீர்க்கப்படும் பிரச்னையன்று. மனமாறி நம் உண்டாவதற்கான முயற்சிகள் போதிய அளவு நிகழ்ந்த பின்னர் வேறு வழி இல்லையென்ற தவிப்பு ஏற்பட்ட நிலையில் சட்டத்தின் துணையைத் தேடலாம்.

ஆலயப் பிரவேசப் பிரச்னைக்கும், ஏனைய சமூகக் குறைபாடுகளைத் தீர்க்கும் முறைக்கும் வேறுமுண்டு. இவ்விரண்டையும் ஒருநிலையில் வைத்துக் காணிதலாகாது.

சாதாரண சமூகக்குறைபாடுகளைத் தீர்க்கும் பிரச்னையில் உடனடியாகச் சட்டம் தலையிடவேண்டும் என்பதே எமது கருத்து. இதுவரை சட்டம் ஒதுங்கியிருந்தது பிழை என்பதும் எமது கருத்து.

ஆலயப் பிரவேசத்திற்கு, இன்றுள்ளதும் நிலையில், வன்முறையைப் பயன்படுத்தவோ, சட்டத்தைப் பயன்படுத்தவோ, எவரேனும் எண்ணுவரேல் அவ்வாறு எண்ணுபவர் நினைவில் கருத்து இன்றி வெறும் தற்காலிகவெற்றியொன்றைமட்டுமே கருத்திற் கொண்டவராவார்.

இதனை ஒரு வெற்றி-தோல்விப் பிரச்னையாகவளரவிடப்படாது என்று இதில் சம்பந்தப்பட்டவர் அனைவரையும் வேண்டிக்கொள்ளவிரும்பகின்றேன். வெற்றிதோல்வி நினைவுகள் எழுமேல் தீர்வு தூரத்தாய்விடும்என்பதை மறந்துவிடலாகாது.

இன்றைய நிலையில், வன்முறையால் பழிக்குப்பழி வாங்கலாம். சட்டத்தால் அடக்குமுறை நிலவலாம். இவையா நாம் விரும்பும் தீர்வு? முடிவான-முழுமையான - அமைதியையும் அன்பையும் சைவ சமூகத்தில் மலரவைக்கும் தீர்வுகளாக இவை அமையாஎன்பது உறுதி.

1-7-68ல் ஏதோ ஒரு திட்டத்தை எட்டச் சாரபில் பொலிசார் அமுல் நடத்த எண்ணியிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

நாம் அனைவரும் சமத்துவமாய், சகோதரத்துவமாய் வாழ முன்வரல்வேண்டும்.

நாடுநகர் அமைப்பு நிர்மாணி திரு. குணரத்ன பேசுகையில் முதலில் இங்கு அமைக்கப்பட்ட இத்திட்டம் காலக்கிரமத்தில் இலங்கை முழுவதும் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென்றார். கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஒதுக்கப்பட்டுவந்த மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றார்.

அரசாங்க அதிபர் திரு. வேரணை அபயசேகர, திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் எம். பி; க. துரைரத்தினம் எம். பி; எஸ். ஜே. வி. செல்வநாயகம், செனட்டர் நடராஜா, ஏ. இராஜசுரியர், ஜி. நல்லையா, ஏ. ஹென்றி ஆகியோரும் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். [ரை நி]

முதலியார் செ. சின்னத்தம்பி

இந்தப் பிரச்னையைச் சமாதானமாகத் தீர்த்துவைப்பதற்குப் பல தோணிகளிலும் முயற்சிகள் சில காலமாக நடந்துவந்திருக்கின்றன. முக்கியமாக யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், இந்து மாமன்றமும், பத்திரிகைகளும் செய்துவந்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. ஆனால் இந்த முயற்சிகள் பேதா. மக்களுடைய உள்ளங்களைத் தொடுமளவிற்கு எந்த முயற்சியும் இதுவரையும் வளர்ச்சிபெறவில்லை.

இஃது ஒரு தார்மீகப் பிரச்சினை. நூறு நூறாண்டு காலமாக வழக்கிலிருந்த பொதுமக்களுடைய உள்ளங்களில் ஊறிப்போன ஒரு கொள்கையை மாற்றியமைக்கும் பெரும் பிரச்னை. வன்முறையை எட்டிப்பார்க்கவும் விடாதவாறு சமய சம்பந்தமான ஒரு புனிதப் பிரச்னை. சனோ

நெருக்கடி நீங்க ...நகவேண்டும்

...உதவி ...மைச்சர்

..., மேலதிக உ... ...மிஷனர் எஸ். ...ர்த்தனு. உ...ளூ ...ஆணையாளர் ...முருகவேள் ஆகி ...ளவரத்தியங்களு ...லமாக அமைந்த ...ர்கள்.

...ற வீட்டுத்திட் ...க்கும் மேற்பட்ட ...சொடிகளாலும், ...முகு, முகில், ...ணங்கள், பச்சை ...ாலும் அலங்கரித் ...தன சோப்பாப் ...ரு. எஸ். கதிர ...ங்கே தலைமையில் ...ற கூட்டத்தில் ...மைச்சர் திரு. ஆர். ...ர மேலும் பேசிய

...டுத்திட்டம் சேரி ...பவர்களுக்கு மிக ...மைபகத்தாக ...ருக்கும். இதனை ...ரித் அமைச்சர் ...வம் எடுத்த தெ ...துவானதல்ல. இத் ...தவிக் அச்சுவேலி ...குராப்பணம் ...வக்கப்பட்டுள்ளது ...ர எந்த அரசாங் ...ப்பாத இத்திட் ...தேசிய அரசாங் ...நடமுறைத் ...ண்டுவந்துள்ளது. ...னையும் சாதி, மத ...றி, வரமை.பினி, ...ரி வாழவைப்

பதையே முக்கிய லட்சியமாகக் கொண்டே தேசிய அரசாங்கம் இத்திட்டத்தை முதலில் வடமகுதியில்நிறைவேற்றியுள்ளது. நமது அரசாங்கத்தின் உபஉணவு உற்பத்திக்கு நூறுவீதம் ஆதரவு கொடுத்து உற்பத்தி வைரிகளுக்கும் வடபகுதி விவசாயிகளே இலங்கையின் எந்தப் பகுதிமக்களும் எண்ணும் மறக்க முடியாது.மறக்கவும் கூடாது.

உள்ளூராட்சி அமைச்சர் திருசெல்வம்பேசியதாவது

பிறப்பாலும், தொழிலாலும் ஒருவர் குறைந்தவராக இருந்துவிட்டால் அவர்களை என்றுமே ஒதுக்கியும் நசுக்கியும் வாழ்வது தவருகும். இங்கு வாழும் சிறு பான்மைத் தமிழ் மக்கள் படும் அல்லல்களை நாம் தினம் தினம் கண்ணுரக் கண்டுகொண்டேயிருக்கின்றோம்.

பல பல இன்னல்களுக்கிடையில் தவிக்கும் இவர்களுக்காகவே இத்திட்டம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் மொத்தம் 108 வீடுகள் இரண்டு கட்டங்களாக நிறுவப்படும். இவற்றிற்காக 8,00,000 ரூபா உதவிச் செலவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 4,20,000 செலவில் 54 வீடுகளைக்கொண்ட இத்திட்டத்தை 15 மாதங்களில் நிறுவி முடித்துத் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இனி வரவு நிச்சயம் என்னும் பேய் எண்ணம் விட்டுப்பிரி

ஐயாறன் எழுதுவது

கண்டியிலிருந்து ஓர் அன்பர் லீலா பஞ்சாசிகை கலண்டரில் இன்று 30-ம் திகதி தாமே வைத்த ஓர் அன்பான கடிதம் எழுதியிருக்கிறார். "குழந்தைகளின் இரட்சகர், ஏழை மக்களின் நண்பர், சமூகசேவையாளர். யாழ்ப்பாணம் டாக்டர் ச. சி. சண்முகரத்தினம் அவர்கள் ஜனனம் 11-12-1919. மறைவு 30-6-1966" என்று டாக்டரின் புகழுருவம் பூத்த படத்துடன் அந்த இதழிலேயே டாக்டரின் இரண்டாவது நினைவு நாளும் நினைவுகூரப்பட்டுள்ளது. இந்த மிகவும் நெருக்கடியான நிலையில் ஒரு வீரர் அரங்கிற்கு வருவாரா?

இந்தப் புனிதமான-நீதியான-இயக்கத்தில் ஒன்றி நின்று உழைக்க ஒருதலைவர் கூட இல்லையே என்ற அவல நிலை உருவாகி இருக்கும் போது, பிரச்னை தக்கமுறையில் சுமுகமின்றித் தீர்வு பெறுவது எப்படி.

இன்று நாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பது ஜனநாயக சமுதாய அமைப்பு அல்லவா? ஜனநாயக அமைப்பிற்கு உடன்பாடான தேச வழமைகள் மட்டும்தானே செல்லுபடியாகு மென்பதை குழந்தைகள்கூட மறுக்க மாட்டார்களல்லவா. தேச வழமைப்படியுள்ள சொத்து ரிமைச்சட்டங்களுக்கு இடம் இருக்கலாம். ஆலய பிரப்பின் அடிப்படையில் பேசப்படும் தேசவழமைகளை ஜனநாயகம் ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?

பிறப்பினால் உயர்வு எவர்க்கும் இல்லை என்பதும் வாழ்க்கையில் வரும் சலபோகங்களையும் உயர்வுகளையும் பெறுதற்குரிய வாய்ப்புக்கள் யாவர்க்கும் சமம் என்பதும் ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்கள் என்பதை மறந்து தேச வழமை பேசிச் சாதிபேதங்களை ஜனநாயக சமுதாயத்தில் நிலைக்க வைக்கும் முயற்சி ஜனநாயக துரோகம்.

வருண சமுதாயம் இன்று எங்கும் இல்லை. வருண சமுதாயம் இந்தியாவிலேயே அழிந்துவிட்டபின் இங்கு அதனை நிலைக்கவைக்க இயலுமா? வேதாகமங்களில் பேசப்படும் வருணபேதம் எங்கெல்லாம் இந்தியாவைவிட்டுப் பல ஆண்டுகள் ஆய்கிட்டனவேயல்லவா? அரியாசனத்திலிருந்து சோலோக்கிய அரசர்களெல்லாம் கீழே இறக்கப்பட்டு, அவர்களிருந்த ஆசிப்பீடங்களில் ஜனநாயகத்துவத்தைமைய இக்கட்சிப்பிரதிநிதிகளை இன்று ஏற்றப்பட்டு இருக்கிறார்கள். இந்த நிலைமையில் வருண அடிப்படைச் சாதிப் பேச்சுக்கும் இடமுண்டா?

இதுபோன்ற பல நிலைமைகளைச் சிந்தித்துக் காரணிகளை மேற்கொண்டு, இந்த ஆலயப் பிரவேசத்தை அரசியற்கு மாறு மக்களை வேண்டிக் கொள்வதற்கு ஒரு நீதிப் பிரசார இயக்கமே இப்போது செய்ய வேண்டியது.

இந்த இயக்கத்தை இந்த மாகாணத்தில் போன்ற சமய சங்கங்கள் நடத்தி முடிக்கும் வரை, சட்டம் தலையிடாது இருப்பதே விரும்பத்தக்கது.

எழுதியுள்ளார். இதைப் படித்ததும் பல்லாயிரக் கணக்கான உள்ளங்கள் இதேபோல் காலஞ்சென்ற டாக்டருக்கு இன்று அஞ்சலி செலுத்தியிருக்கும்.

* * *

46 வருடங்களே வாழ்ந்த டாக்டர் அவர்கள் தொண்டு மக்களிடையே இவ்வளவு நல்ல பெயரெடுத்துள்ளாரெனில், அதற்கு அவரது தன்னலமற்ற அன்புப் பணியே காரணமாகும். எதற்கும், யாருக்கும் அஞ்சாதவர். தமக்குச் சரியெனப் பட்டதைச் செய்து முடிப்பவர். அவரது வதை கொடுப்பது இடது கைக்குத் தெரியாது.

யாழ்ப்பாணத்தில் சேவை தொடர்பாணி என்றதும் கலைப்புலவர் நவரத்தினவர்களின் பெயர்தான் மனதிலும் முன்னிற்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்றைய பலன்

[30- 6 - 68]

ஆனி மீ 17 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- சதுர்த்தி காலை 6-45 வரை மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- மகம் இரவு 1-49 வரை மேல் பூரம்.

ராகுகாலம் - 4-26 5-56

எமநேரம்- 8-56— 10-26.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு தொல்லைக்குரிய ஆண்டாகும். கைத்தொழில் புரிவோர் கவனம்வேண்டும். வனிதையர் நம்பிக்கெடுவர். வழக்குடையோர் பிணக்குகள் தொடரும். துணைவர் துண்டிக்கப்படுவர். உத்தியோகத்தர்கள் கடமையில் கவனம்வேண்டும்.

மேஷம்-குருவின்வாக்கு குணமான போக்கு.

ரிஷிபம்- தானியச் சிறப்பு. தெய்வத்தின் நினைப்பு.

மிதுனம்- பொருள் வரவு புதிரான பேச்சு

கடகம்- பொருள் விரயம், தொல்லைகள் பெருகும்.

சிம்மம்- கோபப் பார்வை, கொள்கையில் கோணல்.

கன்னி- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.

துலாம்- எண்ணிய தடை, இனத்தில் புயல்.

விருச்சிகம்- அன்னையின் ஆசி, தனத்துடன் வாழ்தல்.

தனுசு- பனிமலர் பார்வை, பாசத்தின் சாயல்.

மகரம்- பகைமூட்டம் பதட்டத்தைத் தவிர்.

கும்பம்- காதல்கரும்பு, சுவைத்திடல் விரும்பு.

மீனம்- நம்பிக்கை துரோகம், நஷ்டமடைதல்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 30-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 அதிப்பாடல்கள் 7-30 தேர்ந்தஇசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநிலை வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 குதூகலம், 6-45 பாவளம், 7-00 உரைச்சித்திரம், 7-30 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

அஞ்சலி

குரும்பசிட்டி, சனி

தெல்லிப்பழை முற்போக்கு ஐக்கிய வாலிபர் கழகத்தினர் செனட்டர் ரெரேபேட் கென்னடி, டாக்டர் மாட்டின் லூதர்சிங் ஆகியோர் மறைவுகள் குறித்து கழக நிலையத்தில் அனுதாபப் பொதுக்கூட்டம் நாடாத்தினர். கழகத் தலைவர் திரு. கே. இரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திருவாளர்கள் கே. டானியல், எஸ். கிருஷ்ணமூர்த்தி, எஸ். பரராஜசிங்கம், பீ. சந்திரசேகரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ஜூலை 3 ல் விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுமார் ஒன்றரை வருட காலத்தின்முன் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட சங்கானை பட்டினசபை காரியதரிசி சம்பந்தப்பட்ட விசாரணை ஜூலை மாதம் 3ம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபையில் நடைபெறும்.

தாலிக் கொடியை அறுத்தனராம் ஒருவர் கைது

அளவெட்டி, சனி

வயல்வழியே சென்ற பெண்ணின் தாலிக்கொடியை அறுத்தனராம் சந்தேகத்தின்பேரில் ஒருவர்கைது செய்யப்பட்டார். இன்னொருவர் தலைமறைவாகத் திரிகிறார்.

இளவாலையைச்சேர்ந்த கனகசபை சிவபாக்கியம் என்ற பெண்வயல் வழியாகச் சென்று கொண்டிருக்கும் போது கொட்டிஸ் சின்னத் தம்பியும், வல்லிபுரம் ராசதுரையும் அப்பெண்ணின் கழுத்திலிருந்த 1500 ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அறுத்துச் சென்று விட்டதாக காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வல்லிபுரம் ராசதுரைஎன்பவரை பொலிசார் கைது செய்து பாதுகாப்பில்வைத்துள்ளனர். மற்றநபரை பொலிசார் தேடிவருகின்றனர்.

இந்திய-ரஷ்ய...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ளருடன் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திய—ரஷ்ய வர்த்தக அபிவிருத்தி பற்றிய இரு நாட்டு வர்த்தக மந்திரிகளினதும் பேச்சுவார்த்தைகளில் ரஷ்யப் பிரதமர் அதிக அக்கறை காட்டினார்.

சோவியத் கப்பல்கள், ரயில்வே வாகனங்கள் ஆகியவற்றை இந்தியா வாங்குவது பற்றியும், திரு, தினேஷ் சிங்கின் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டது.

இந்தியாவுக்கு வருமாறு தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை, ரஷ்ய வெளிநாட்டு வர்த்தக மந்திரி ஏற்றுக்கொண்டுள்ளார்.

சுழிபுரத்தில்

சுழிபுரம், சனி

கூட்டுறவாளர் தினவிழா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஜூலைமாதம் 1ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

யாழ் மாவட்ட

காணி அதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட காணி அதிகாரியாகக் கடமையாற்றும் திரு து. உருத்திரமூர்த்தி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்காக கிளிநொச்சி மாவட்ட காணி அதிகாரியாயிருந்த ராஜரத்தினம் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம்பெற்றுள்ளார்.

(கா. நி)

500ஆகப் பிரிக்கவும்

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராமசபையின் ஒவ்வொருவட்டாரங்களையும் ஐநூறுவாக்காளர் கொண்ட வட்டாரங்களாகப் பிரிக்க ஒழுங்குசெய்துதரும்படி சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. கந்தசுவாமி உள்ளூராட்சி அமைச்சரையும் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரையும் வேண்டியுள்ளார்.

டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை



சளிசுரத்துக்கு காய்ச்சலுக்கு வலிகளுக்கு

இதற்குக் காரணங்கள் பல...

இரத்தத்தில் விரைவாகச் செறியும் மருந்துகள் துரித நிவாரணம் தருவன. டிஸ்பிரின் விரைவாகக் கரைவது. அதனால் இரத்தத்தில் விரைவாகச் செறிந்து துரித நிவாரணம் தருகிறது.

முற்றாயும் விரைவாயும் கரையும் டிஸ்பிரினில் மற்றுமொரு விசேஷ சிறப்புண்டு. அதையொத்த கரையாத மற்ற மருந்துகளைப் போல, டிஸ்பிரின் கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. அதனால் தான் டிஸ்பிரின் பாவிப்பதற்கு மிகப் பாதுகாப்பானது.

சில மருந்துகளை உபயோகித்த பின் பாரதூரமான பாதகங்கள் ஏற்படுவதுண்டு. தலைவலி, காய்ச்சல் போன்றவைக்கு வழக்கமாகப் பாவிக்க, நீங்கள் நம்பக்கூடிய ஒரு மருந்தையே உபயோகிக்க வேண்டும்.

பல நாடுகளில், தொடர்ந்த பாவனையால், பாதுகாப்புக்கும் வன்மைக்கும் நம்பிக்கை பெற்றது டிஸ்பிரின். ஆகையால் நீங்களும் நம்பிக்கையுடன் அதை உட்கொள்ளலாம்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் வன்மையான, பாதுகாப்பான, துரித நிவாரணத்துக்கு, டிஸ்பிரின் சிறந்த மருந்தென அனுபவத்தில் கண்டு, அதை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள்.

சளி சுரத்துக்கும் காய்ச்சலுக்கும் வலிகளுக்கும் அதி சிறந்த சிகிச்சை வேண்டுமானால் டிஸ்பிரினையே நீங்கள் எப்போதும் பாவிக்க வேண்டும்!

P-7489

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேம்படி மகளிர் விளையாட்டுப்போட்டி

'கோன்பி' இல்லம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஞாயிறு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கோன்பி இல்லம் முதலாவதாக வந்தது. 183 புள்ளிகளைப் பெற்ற இவ்வில்லம் இரண்டாவது இடத்தையும், 79 புள்ளிகளைப் பெற்ற ஹெலிகிறப்ற் இல்லம் மூன்றாவது இடத்தையும், 49 புள்ளிகளைப் பெற்ற இரீடி இல்லம் நான்காவது இடத்தையும் பிடித்தன.

யாழ்ப்பாணம் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சி. சண்முகநாதன் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. கனிஷ்ட பிரிவு சாம்பியனுக்கு சுரேந்தினி அபிராமினும், மத்தியபிரிவு சாம்பியனுக்கு வாணிநிலையும், மகுடமன் இரத்தினசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். சிரேஷ்ட பிரிவு சாம்பியனுக்கு மனோகரி சிவகுருநாதன் தெரிவுசெய்யப்பட்டார். [ந. நி.]

விளையாட்டுப் போட்டி

சுழிபுரம் சனி

மண்டைதீவுமகளிர் கல்லூரி இலவங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ஜூலைமாதம் 1ம் திகதி கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

சேவைக்குப் பாராட்டு

ஆளவெட்டி சனி

அகில இலங்கை சமாதான நிவாரணசங்கத்தின் காரியதரிசியாக பல காலமாகக் கடமையாற்றிய திரு. எம். எஸ். துரைராசா கூட்டுறவு மாகாண வங்கி அதிகாரியாக உயர்பதவி பெற்று செல்வதையிட்டு அவரைக் கௌரவிக்கும்முகமாக வலி-வடக்கு காரியாதிகாரி நிலையத்தில் அண்மையில் ஒரு பிரிவுபசாரவிழா நடைபெற்றது.

வலி - வடக்குப்பகுதியில் உள்ள கிராமசேவையாளர்களும், மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்ட இவ்விழாவுக்கு வலி-வடக்கு காரியாதிகாரி திரு. பி. எஸ். பத்மநாதன் தலைமைதாங்கினார்.

இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று காலை 10 மணி முதல் மாணிக்கவாசகர் குருபூசை நடைபெறும்.

* * *

உடுவில், ஞாயிறு இன்று யாழ்ப்பாண கனிஷ்ட தொழில் நுட்பநிலைய சைவமன்றத்தினர் மாணிக்கவாசகர் குருபூசையை கொண்டாடுவர்.

* * *

கொக்குவில் சனசமூக நிலையத்தில் இன்று நடைபெறவிருக்கும் மாணிக்கவாசகர் குருபூசையில் பண்டிதர் நா. இராசையா சொற்பொழிவாற்றுவார்.

* * *

40 வருட சேவை

உடுவில், சனி

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. செ. கனகசபை 40 வருட சேவையின் பின் இம்மாதம் முதல் ஓய்வு பெறுகிறார்.

திரு. செ. கனகசபை இக்கல்லூரியில் பல ஆண்டுகள் ஆசிரியராகவும், கடந்த சில வருடங்களாக மாட்சிமையின் ஆரம்ப பிரிவு அதிபராகவும் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

'மிஸ்டர் மானிப்பாய்'

உடுவில், சனி

அகில இலங்கை சமாதான நிதி வீழாவையொட்டி மானிப்பாய் பட்டின சபையால் நடாத்தப்பட்ட போட்டியில் 'மிஸ்டர் மானிப்பாய்' திரு. ஆர். இராஜ மனோகரன் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு. கே. இரவீந்திரநாதன் இப்போட்டியில் இரண்டாம் இடத்தையும், திரு. எஸ். ஜெயேந்திரா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

மற்றொரு போட்டியான விநோத உடைப் போட்டியில் முதலாம் இடத்தை செல்வன் எஸ். மகேந்திரனும், இரண்டாம் இடத்தை செல்வன். கே. குமாரதாசனும் பெற்றுக்கொண்டனர்.

சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவில் விநாயகப் பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை 1 ம் திகதி நடை பெறவிருக்கின்றது.

மே. பாகிஸ்தான் நகரில் ஊரடங்கு சட்டம் நீடிப்பு

டாக்கா, ஜூன் 29

மேற்குப் பாகிஸ்தானில் உள்ள கராச்சி என்னும் நகரில், அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம், மேலும் நான்கு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

'எக்ஸ்பிரஸ்' என உலகுக்குப் பிரபலமான பாகிஸ்தான் தினசரி காலை அத்துடன் வெளிவராமல் தடைசெய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட கலவரங்களை தொடர்ந்தே இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

நேரே முகாமுக்கு வரலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு விவசாயப் பண்ணைகளுக்கு தெரிவு செய்யப் பட்டவர்களை எம். பி. மார்களிடம் கடிதம் பெற்றவர்கள் தங்களுடைய கூப்பனுடனும் எம். பி. யினது கடிதத்துடனும் நேரேமுகாமுக்கு வரும்படி கோரப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணமாநகரசபை

அறிவித்தல்

1-7-68ஆம் திகதிமுதல் படமாளிகைகளுக்கு புகை பிடித்தல் மாநகரசபை உப விதிகளின்கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை இரசிகப் பொதுமக்கள் அவதானித்துக்கொள்ளவும். குற்றம் இழைத்த குற்றவாளி ஒவ்வொருவரும் நூறு ரூபாவுக்கு மேற்படாத தண்டம் ஒறுக்கும், தவறு தொடர்ந்து இழைக்கப்படும்பட்சத்தில், மேற்கொண்டு நாள் ஒவ்வொன்றிற்கு ரூபா இருபதைத்தாண்டாத தண்டம் வேறொன்றுக்கும் ஏதுவாவார்.

கட்டளைப்படி.

[மாநகரசபையில் ஆணையாளர்.

855

திடீர் மரணம்

சாய்ந்தமருது, சனி

அம்பாறைப் பகுதியில் ஐஸ்கிறீம் வியாபாரம் செய்துவந்த எம். பி. அபயவர்த்தனா என்ற 28 வயது இளைஞன் திடீரென மரணமானார். மரணவிசாரணை நடைபெற்றது.

தேவை

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சமாசம், 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்துக்கு 1,00,000 'சி' தர சாக்குகள் தேவை. 5-7-68 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பத்திரங்களை நிபந்தனைகளுடன் பெற்றுக் கொள்ளவும்.

854 காரியதரிசி.

ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அம்பாள் ஆலய உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. 11 உற்சவ நாள்களிலும் சதாகாலப் கூஷபம் நடாத்தப்படும்.

ஓய்வுபெற்றார்

புங்குடுதீவு, சனி

22 ஆண்டு சேவைக்குப் பின் ஊரெழு ஸ்ரீகணேச வித்தியாசாலை ஆசிரியர் திரு. சிவகுரு வைத்தியலிங்கம் நேற்று முன்தினம் ஓய்வு பெற்றுக்கொண்டார்.

உலகின் அதி சிறந்த கோயா சோப்பும் பவுடரும் பாவித்து ஒய்யார மாதராய்த் திகழுங்கள்!

நாள் முழுதும் உங்களைச் சுகந்த மலர்ச்சியுடன் விளங்க வைக்கும் பிரபலமான கோயர் வாசனைத் திரவியங்களின் ஐந்து பரவசமூட்டும் நறுமணங்கள் கொண்ட அதி செறிவான செழுமையான சோப், கோயா சோப்!

கோயாவின் உலகப் பிரசித்தி பெற்ற அதிமிருதுவான பட்டுச் சொகுசுள்ள கோயா பவுடர் மாத்திரமே ஆறு வித மோகன வாசனைகளை வழங்குகிறது.

தனித்தனிச் சிறப்புள்ள ஒய்யார நறுமணம் ஊட்டி, உங்கள் பெண்மைக்குப் பெருமிதம் அளிக்கும் சொகுசு மிக்கவை கோயா சோப்பும் பவுடரும் மட்டுமே!

நானிலத்தின் சிருங்கார நகரம் தோறும் மகிமை பெற்ற செறிவு மிக்க செழுமையான சுகந்தம் வாய்ந்த கோயா சோப்பும் பவுடரும் பாவித்து, நவநாகரிக நளின நங்கையராய் மிளிருங்கள்.

லண்டன், பரிஸ், நியூயார்க் நகரங்களில் மகிமை பெற்ற கோயா, உலகின் அதி சொகுசான சோப் பையும் பவுடரையும் உங்களுக்கு அளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்னடி கொலைஞனை விடுவிக்க முயற்சி?

நியுயோர்க், ஜூன் 28

ரொபர்ட் கென்னடி கொலை சம்பந்தமாக காவலில் வைக்கப்பட்டுள்ள ஷெரான் இருக்கும் சிறைக்கு முன் வெடி குண்டுகளுடன் நின்ற 4 பேரை அமெரிக்கபொலிசார் கைது செய்தனர். ஷெரானை விடுவிக்க இவர்கள் சதி செய்ய விருந்ததாகக் கூறப்படுகிறது.

ஐ. நா. உதவுகிறது

புத்தர் பிறப்பிடம் உலக பௌத்தர் வழிபாட்டு ஸ்தலமாகும்

நியூயோர்க், ஜூன் 28

புத்தபிரான் பிறந்த இடமாகிய லும்பினியை உலக பௌத்தர்களின் வழிபாட்டு இடமாகச் செய்வதற்கு ஐ. நா. உதவி அளிக்க விருக்கிறது.

லும்பினிக்குச் செல்வதானால், இப்போது ஹெலிகொப்டர் விமானம் மூலமே செல்லலாம். மாட்டு வண்டிப் பிரயாணமானால் மூன்று நாட்கள் எடுக்கும். இந்த இரண்டு வழிகளையும் தவிர வேறு பிரயாண வசதிகள் தற்போது இல்லை.

லும்பினியைச் சீர்திருத்தும் திட்டத்தை நேபாள அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்துக்கு ஐ. நா. வும் உதவி அளிக்க முடிவு செய்துள்ளது.

மத விவகாரமொன்றில் ஐ. நா. இவ்வித உதவியளிப்பது இதுவே முற்றி தடவையாகும்.

கடந்த டிசெம்பரில், ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் ஹெலிகொப்டர் மூலம் லும்பினிக்குப் பிரயாணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வின்ஸர்
முத்துராமன்
உதயசந்திரிகா
நடித்த
ராஜாத்தி

கிங்ஸ்லி பிளாசா மைலன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜிதா (அட்டன்) அயன் (மன்னார்)
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர்: விஜயா
நடித்த

ஏ. வி. எம்.
புரொடக்ஷன்ஸ் ராமு

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [1968-ம்] ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஜனநாயகமும் தீண்டாமையும்

யாழ்ப்பாணம், சனி

"சாதியமைப்பு முறைக்கெதிரான போராட்டத்தைப்பற்றி எல்லோரும் அலசி ஆராயவேண்டும். எங்கு அடக்குமுறையுண்டோ அங்கு போராட்டமுண்டு. எங்கு போராட்டமுண்டோ அங்கு தியாகமுண்டு. இந்த உண்மையை மனதில்வைத்து ஒடுக்கப்பட்ட மக்கள். தங்கள் ஜனநாயக உரிமைகளுக்காக தொடர்ச்சியான போராட்டத்தின்மூலமே தீண்டாமையை ஒழிக்கமுடியும் இவ்வாறு வடஇலங்கை ஐக்கிய கள்ளுத்தொழிலாளர் வருடாந்த மகாநாட்டில் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் திரு. வாட்சன்பெர்னாண்டோ கூறினார். [ந. நி.]

வேணன்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் இடமாற்றம் இருவார காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. திரு. வேணன் அபயசேகரா ஜூலை மாதம் 15-ம் திகதிவரை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராக தொடர்ந்து கடமையாற்றுவார். [கா. நி]

தாலிக் கொடியை திருடினாராம்

திருக்கோணமலை, ஞாயிறு

தம்பலகாமத்தில் வீடு வீடாகச் சென்று நுளம்பு நாசினியான டி. டி. ரி. மருந்து தெளிக்கும் மலேரியா தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் ஒரு வீட்டில் டி. டி. ரி. அடித்த பின்பு ஒன்பது பவுண் எடையுள்ள தாலிக் கொடி ஒன்றைத் திருடியதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இப்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தம்பலகாமம் உப தபால் நிலைய அதிபர் திரு. இராசையா நடேசலிங்கத்தின் வீடு முழுவதும் டி. டி. ரி. மருந்து தெளித்துவிட்டு டிக்கிரிபண்டா என்பவர் சென்றபின்னர் அவருடைய மனைவியார் தனது படுக்கையில் கழற்றி வைத்திருந்த 9 பவுண் எடையுள்ள தாலிக்கொடியைத் தேடிய போதுதான் அது காணாமற் போனது தெரியவந்தது.

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
SINGING NUN
கீதம் பாடும்
கன்னியாஸ்திரிகள்

MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00 & 9-45 P. m.
Jayne Mansfield
in
TOO HOT TO HANDLE
(Adults only)

RAJAH
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45 p m.
Barbara Steel,
George Harrison
in
Long Hair of Death
(Adults Only)

ஐயாறன்

5-ம் பக்கத் தொடர்ச்சி

அவருக்கு உறுதுணையாக இருந்தும் பின் அப்பொதுப் பணிகளை வெகுவாகச் செய்துவந்தவருமான டாக்டர் அவர்கள் மறைந்த பின், பொதுவாழ்வே இங்கு ஒரு பெரிய துணைவரை இழந்துவிட்டதாயும். தாங்கள் அனாதையாகிவிட்டதாயும், விதவாலய முன்னாள் அதிபர் அம்பிகையாகள் அவர்கள் சொல்லி வருந்துகிறார்.

இங்கு பல தலைவர்கள் உள்ளது உண்மையே. ஆனால் அரசியல் நோக்கமின்றி பொதுப்பணியில், எல்லாருக்கும் நண்பனாக உழைப்பவர்கள் எத்தனை?

ஃ ஃ ஃ

ஒருநாள் இரவு 11 மணி இருக்கும். 'ஈழநாடு' காரியாலயத்துக்குத் திடீரென வந்தேன். அங்கு என்ன பார்த்தேன் தெரியுமா? டாக்டர் அவர்கள் எனது மேசையின் பக்கத்தில் அமர்ந்து, மேசையை துப்புரவாக்கிக் கொண்டிருந்தார். இதைக் கண்டதும் எனக்கு ஒருபுறம் வெட்கம் மறுபுறம் வியப்பு.

என் மேசை மீதும், உள்ளே அறைகளிலும் பல பல காகிதங்களும், புத்தகங்களும், கட்டுரைகளும் ஒழுங்கின்றி கிடக்கும். அதைக்கண்டு சகியாமல் என்னிடம் சொல்லி என் மனதைப் புண்படுத்தவும் விரும்பாமல், தாமே யாரும் அறியாமல் இரவில் இதைச் செய்து, என்னைத் திருத்த முயன்ற அப் பண்பாளரை என்னால் எப்படி மறக்க முடியும்? அவர் விட்டுச் சென்ற நல்ல காரியங்களெல்லாம் பூரண வெற்றி பெறுமாயின் அது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கே நல்லதாகும்.

ஃ ஃ ஃ

மாணிக்க வாசக சுவாமிகளின் குருபூசையும் இன்றுதான். சிதம்பரத்துக்குச் சென்றிருந்த ஈழத்து பௌத்தர்களை வாதில் வென்று, ஊமைப் பெண்ணை பேசவைத்து, சைவத்தைப் பாதுகாத்து நிலைநாட்டிய சமயகுரவரை சைவ உலகம் என்றென்றும் நன்றியுடன் போற்றக் கடமைப்பட்டுள்ளது.

அவரது தாய்மொழி தெலுங்கு என்றும், வாதவூரில் ஆமாத்திய பிராமண குடும்பங்கள் பல இன்றும் இருப்பதாகவும், தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட சுத்தானந்த மகிரிஷி அவர்கள் தெரிவிப்பதுடன், மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கேதீச்சரம்வந்து தரிசித்துள்ளதாகவும், அவரது திருவடிகள் ஈழத்தில்பட்டு இந்த மண் புனிதமடைந்துள்ளதாகவும் கூறுகின்றார்கள்.

இது எப்படியாயினும், அவர் அளித்துள்ள திருவாசகச் செல்வம், ஈழம் மட்டுமல்ல, உலகனைத்துக்கும் உய்யும் வழிகாட்டுவதால், அவர் உலக குரு என்பதில் தவறுண்டோ?

ஃ

"பாரொடு விண்ணாய்ப்
பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன்
கண்டாய்,
சீரொடு பொலிவாய்
சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை
சிவனே,
யாரொடு நோகேன் யார்க்
கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை
யானால்,
வார்கடல் உலகில்
வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள்
புரியாயே"
—மணிவாசகர்.

திருத்தம்

தமிழ், சிங்கள, ஆங்கில டைப்ரைட்டர்களின் எல்லா விதமான பழுதுகள் பார்க்கவும், பெட்டிகள் புதுப்பிக்கவும் நியாயமான செலவில் நேர்த்தியான வேலை. ரி. அலெக்சாண்டர், ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 348. 1201

மார்ட்டின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கப்பட்டபோது மேயராக இருந்த திரு. அல்பிரெட் துரையப்பா இதுபற்றிக்குறிப்பிடுகையில் 17 வட்டாரங்கள் எத்தனை வட்டாரங்களாக அதிகரிக்கப்பட்டாலும் பரவாயில்லை என்றும், மக்களின் ஜனநாயக உரிமையை மீண்டும் தரும்படியே தரம் பிரிவுக்கவுன்சில் வரை வாதாடியதாகவும் மீண்டும் யாழ்ப்பாண மக்களின் ஜனநாயக உரிமையை உள்ளூராட்சி அமைச்சர் வழங்க முன்வந்திருப்பதற்கு யாழ்ப்பாண மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றும்கூறினார்.

வரியிறுப்போர் சங்கத் தலைவரும் முன்னாள் மேயருமான திரு. டி. எஸ். துரைராசா தெரிவித்ததாவது-

விஸ்தரிப்பு பற்றி கவலையில்லை

அமைச்சர் திருச்செல்வம் விசாரணை எதுவுமின்றி மாநகரசபையைக்கலைத்தது தவறானாலும் இப்பொழுதாவது தேர்தலை நடாத்தி மக்களிடம் கையளிக்க முன்வந்திருப்பதற்கு வரியிறுப்போர் சங்கம் நன்றி டையதாக விருக்கின்றது. வட்டார விஸ்தரிப்புப் பற்றி எவரும் கவலைப்படவில்லை. எப்படிப் பிரித்தாலும் யாழ்ப்பாண மக்கள்தான் தேர்தலில் வாக்களிப்பவர்களாக இருப்பார்கள்

தமிழரசுக் கட்சிப் பிரமுகரும் முன்னாள் மேயர்களில் ஒருவருமான வழக்கறிஞர் எஸ். நாகராஜா தெரிவித்ததாவது;-

உரிமையும் கடமையும்

பொதுச் சந்தைக் கட்டட வேலை ஒரு குறையாக இருக்கின்றபோதும் தேர்தல் நடத்தவேண்டுமென்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது வரவேற்கத்தக்கதாகும். தேர்தல் பிரகடணம் தர்மதமானதற்குக்காரணம் வட்டார நிர்ணயம் சம்பந்தமாக இருந்தகருத்துவேற்றுமைதான். சம பிரதிநிதித்துவம் தரக் கூடியவகையில் வட்டார புனநிர்மாணம் செய்தமைக்கு நாங்கள் அமைச்சருக்கு நன்றியுள்ளவர்கள்

கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தெல்லிப்பழைக் கிளையின் நிர்வாகசபைக்கூட்டம் இன்று நடைபெறவிருகிறது திரு. ராசசேகரம் இல்லத்தில் நடக்கும் இக் கூட்டத்தில் திரு. எஸ் ஜே வி. செல்வநாகமும் கலந்து கொள்வார்.

பூநகரிப் பகுதிக்கு
'ஈழநாடு' ஏஜண்ட் தேவை

பூநகரிப் பகுதிக்கு முற்பணம் கட்டி 'ஈழநாடு' விற்பனைசெய்யக்கூடியவர்கள் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். விநியோக மனேஜர், 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 857

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org